சென்னை
சரணாகதி மந்திரிகள்.
இன்னும் எத்தனை நாள்?
இன்றைக்கு
331-வது நாள்.


# விடுதலை.

ஈரோடு 1938-ஆம் ஜூன் மீ 10 உ
வெள்ளிக்கிழமை


# ஹிந்தி எதிர்ப்பாளருக்கு ஸி. ஆர். சவால்.

ஒரு தமிழன் 41 நாள் உண்ணாவிரதமிருந்து உயிர்விடும் நிலைமையிலிருப்பதும் சென்னை முதன் மந்திரி கனம் 'ராஜகோபாலாச்சாரியார் உள்ளத்தில் சூட்டை உண்டுபண்ணவில்லை. சேலம் ஜில்லாப் பிரயாணத்தில் அவர் நேரிற்கண்ட ஹிந்தி எதிர்ப்பு உணர்ச்சியும், அவரது ஹிருதயத்தில் எத்தகைய துடிப்பையும் உண்டு பண்ணவில்லை. சென்ற ஏழெட்டு மாதகாலமாகத் தமிழ் நாட்டில் நடைபெற்று வரும் கிளர்ச்சிகளும் அவரது சித்தத்தைக் கலக்கவில்லை. ஹிந்தியை வலுக்கட்டாயமாகத் தமிழர்கள் தலைமீது சுமத்தப் போவதாகவே பிடிவாதம் செய்கிறார். ஹிந்தி கட்டாய பாட விஷயம் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டிருந்தாலும், "நல்ல மனிதர்கள் மனதை விஷமிகள் குழப்பும் முயற்சியில் வெற்றி பெறாதபடி செய்வதற்காக மீண்டும் ஒரு முறை நிலைமையை விளக்கிக் கூறும் ஒரு அறிக்கை சமீபத்தில் வெளியிடப்படும்" என கனம் ஆச்சாரியார் அ. பி. நிருபரிடம் தெரிவித்திருக்கிறார். மற்றும் "தமிழ் பாழடையப் போகிறதா இல்லையா என்பது தற்காலம் முடிவு செய்யப்பட வேண்டிய பிரச்சினை அல்லவென்றும், ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிகள் ஆளுவதா? அல்லது மனக்குறையுள்ள சிலர் மந்திரிகளை பயமுறுத்தும்படி விட்டு விடுவதா? என்பதே இப்பொழுது முடிவு செய்யப்பட வேண்டிய பிரச்சினை" என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## ஆச்சாரியார் சவால்.

அதாவது "எனக்கு சென்னை அசம்பிளியிலே ஹிமாலய மெஜாரட்டி பலமிருக்கிறது. என் இஷ்டப்படி ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கியே தீருவேன். மனக்குறையுடையவர்கள் காட்டும் பூச்சாண்டிக்கு நான் அஞ்சமாட்டேன். அவர்களால் ஆனதைப் பார்க்கட்டும்" என்பதே அவர் கூறியவற்றின் திரண்ட பொருள். இது ஒரு சாதாரண அறிக்கையன்று; ஹிந்தி எதிர்ப்பாளருக்கு கனம் முதன் மந்திரியார் விடுக்கும் ஒரு சவாலேயாகும். அந்தச் சவாலுக்கு பதிலளிக்க வேண்டிய பொறுப்பு ஹிந்தி எதிர்ப்புக் கமிட்டியாரைச் சேர்ந்ததாகையினாலே அது பற்றி நாம் ஒன்றும் கூறவில்லை. அவரது அறிக்கையிலுள்ள ஏனைய விஷயங்களைப் பற்றியே சில வார்த்தைகள் கூற விரும்புகிறோம். ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரிகள் சர்வாதிகாரிகளல்ல; ஜனங்கள் இட்ட கட்டளைப்படி நடக்கக் கடமைப்பட்ட தாசர்களேயாவர். பொதுத் தேர்தலுக்கு முன் பதவியேற்கப் போவதாகவோ பதவியேற்றபிறகு என்ன என்ன செய்வார்கள் என்றோ காங்கரஸ்காரர் கூறவில்லை. பொய்க் காரணங்கள் சொல்லி, பொய்ப் பிரசாரம் செய்து பதவியேற்றபிறகும் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கும் விஷயமாக தென்னாட்டார் அபிப்பிராயத்தை அறிய காங்கிரஸ் மந்திரிகள் முயலவுமில்லை. ஹிந்தியைக் கண்டித்து எத்தனையோ மகாநாடுகள் நடைபெற்றிருந்தும் எத்தனையோ கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டிருந்தும் ஹிந்தி வேண்டுமென்று எவரும் பகிரங்கமாகக் கேட்டதே இல்லை. இந்நிலையில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குவது எவ்விதம் ஒழுங்காகும்?

## ஸி. ஆர். மழுப்பல்.

மற்றும் கிருஷ்ணகிரி காங்கரஸ் கூட்டத்தில் கனம் ஆச்சாரியார் பேசுகையில் "டென்மார்க்கு போன்ற தேசங்களில் குழந்தைகளுக்கு யாதொரு கஷ்டமுமின்றி 5 பாஷைகள் கற்பிக்கப்படுகின்றன. எனது அரசியல் எதிரிகளால் தான் ஹிந்திக்கு எதிர்ப்பு இருக்கிறது" என்று செப்பினாராம். ஹிந்தி கட்டாய பாட விஷயமாக, கேள்வி கேட்க யோக்கியதையுடைய எத்தனையோ நிபுணர்களால் கேட்கப்பட்ட— ஆணித்தரமான— புத்திசாலித்தனமான கேள்விகளுக்கெல்லாம் விடையளிக்காமலே கனம் ஆச்சாரியார் இது காறும் மழுப்பி வந்திருக்கிறார். அவரது அந்தரங்கம்—அவர் பாசாங்கு செய்வதுபோல்—சுத்தமானதாயின்— அவர் பக்கம் நியாய பலமிருப்பது மெய்யாயின், அக்கேள்விகளில் சிலவற்றுக்காவது விடையளிக்க அவர் முன் வந்திருக்கலாம். எதிரிகள் கூறும் வாதங்களைக் காதில் போட்டுக்கொள்ளாமல், தாம் ஆதியில் கூறியவைகளையே கிளிப்பிள்ளை மாதிரி திருப்பித் திருப்பிக் கூறிக்கொண்டிருப்பது ஒரு மாகாணத் தலைவிதியை நிர்ணயம் செய்யும் பெரிய பொறுப்பைத் தாங்கிக்கொண்டிருக்கும் ஒரு பெரியாருக்கு அடுத்த செயலே அல்ல. போனதெல்லாம் போகட்டும்.

## முதன் மந்திரியாருக்குச் சில கேள்விகள்.

இப்பொழுது நாம் கேட்கும் சில கேள்விகளுக்கு கனம் ஆச்சாரியார் அன்பு கூர்ந்து விடையளிக்க முன் வருவாரா? அவருக்கு ஹிமாலய கட்சி பலமிருந்தாலும் மைனாரட்டி கட்சியைச் சேர்ந்த நம் போன்றார் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டியது ஒரு பொறுப்புடைய மந்திரியின் கடமையல்லவா? ஜனநாயக உணர்ச்சி கடுகத்தனையாவது கனம் ஆச்சாரியார் உள்ளத்து இருக்கும் பட்சத்தில் நமது கேள்விகளுக்கு விடையளிக்க அவர் முன் வந்துதான் ஆகவேண்டும். டென்மார்க்கு போன்ற தேசங்களில் 5 பாஷைகள் கட்டாய பாடமாகவா கற்பிக்கப் படுகின்றன? சுவிட்சர்லாந்திலே மூன்று பாஷைகள் தேசிய பாஷைகளாக இருந்து வருவதையும் அவை கட்டாய பாடமாக்கப்படாமலிருப்பதையும் கனம் ஆச்சாரியார் அறியாரா? ருஷியாவிலே 18 பாஷைகள் சர்க்கார் ஒப்புக்கொள்ளப்பட்ட பாஷைகளாக இருந்து வருவதையும் ருஷியர்களுக்கெல்லாம் பொதுவான ஒரு தேசிய பொதுபாஷையை எல்லாரும் கற்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தப் படாமலிருப்பதையும் கனம் ஆச்சாரியார் அறியாரா? ஒரு தேசத்துக்கு ஒரு பொது பாஷை அவசியம் என எந்த அரசியல் சாஸ்திரம் கூறுகிறது? தேசியப் பொது பாஷையைக் கட்டாய பாடமாக்க வேண்டிய அவசியமென்ன? தேசியப் பொது பாஷையைக் கட்டாய பாடமாகக் கற்பிக்கும் நாடு இந்த உலகத்தில் ஒன்றாவதுண்டா? இந்தியாவுக்கு ஒரு பொதுபாஷை வேண்டுமெனக் கூறப்படுவதும் அதைத் தாய் மொழியாக வழங்காதவர்களும் கட்டாய பாடமாகக் கற்க வேண்டுமெனப் பிடிவாதம் செய்யப்படுவதும் அரசியல் நீதிகளுக்கு அடாத கொடுஞ்செயல்கள் தானே?

## அரசியல் எதிரிகள் புரளியா?

அரசியல் எதிரிகளே ஹிந்தியை எதிர்க்கிறார்கள் என்பதும் நெஞ்சறிந்த பொய் தானே? வங்காளிகள் கனம் ஆச்சாரியாரின் அரசியல் எதிரிகளா? தோழர் பாரதியார் கனம் ஆச்சாரியாரின் அரசியல் எதிரியா? தோழர் டி. ஆர். வெங்கட்ராமசாஸ்திரியார் கனம் ஆச்சாரியாரின் அரசியல் எதிரியா? டாக்டர் சி. ஆர். ரெட்டியார் கனம் ஆச்சாரியாரின் அரசியல் எதிரியா? திருச்சி நேஷனல் காலேஜ் பிரின்சிப்பால் தோழர் சாராநாத் அய்யங்கார் கனம் ஆச்சாரியாரின் அரசியல் எதிரியா? ஹிந்தி எதிர்ப்பாளர்களில் பிரபலஸ்தர்களுடன், ஒரு கௌரவம் வாய்ந்த மத்தியஸ்தர் முன்னிலையில்—ஹிந்தி கட்டாயபாட விஷயமாக ஒரு வாக்குவாதம் நடத்த கனம் ஆச்சாரியார் தயார் தானா? அந்த மத்தியஸ்தர் கூறும் முடிவை ஏற்றுக்கொள்ள கனம் ஆச்சாரியார் தயார் தானா?

## முன் வர மாட்டார்.

கனம் ஆச்சாரியார் நேர்மையுடையவரானால், அந்தரங்க சுத்தியுடையவரானால்—காங்கரஸ் மானத்தில் எள்ளத்தனையாவது அபிமானமுடையவரானால்—தமிழர்கள் முன்னேற்றத்தில் உண்மையாகவே கவலையுடையவரானால்---தோழர்ஸ்டாலின் ஜெகதீசன் ஆத்மாவும் தமது ஆத்மாவைப்போல் புனிதமானது— அருமையானது என நம்புகிறவரானால்— இக் கேள்விகளுக்கு விடையளிக்கத் தவறவே கூடாது. ஆனால் அவர் விடையளிக்க முன்வரவே மாட்டார். ஏன்? அவர் பக்கம் நியாய பலமில்லை. சட்டசபை மெஜாரட்டியால் ஏற்பட்ட அதிகார வெறியினாலேயே அவர் ஹிட்லர் தர்பார் நடத்துகிறார். எனவே இனித் தமிழர்கள் செய்ய வேண்டியதென்ன? ஹிந்தி எதிர்ப்புக் கமிட்டியார் கட்டளைப்படி நடக்க வேண்டியதுதான்.

---

# தலைவர் ஸி. டி. நாயகம் அவர்களுக்கு போலீஸ் சம்மன்.

(ஒரு நிருபர்)

சென்னை, ஜூன், 9.

நேற்று (8-6-38) மாலை 1-30 மணிக்கு தோழர் சி.டி. நாயகம் அவர்களுக்குப் போலீஸார் ஒரு சம்மன் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அதில் தோழர் நாயகம் அவர்கள் 4-6-38-ல் கொடுத்த உறுதி மொழிக்கு மாறாக நடந்ததாகத் தெரிகிறபடியால் அதை ஏன் ரத்து செய்யக்கூடாதென்பதற்குக் காரணம் சொல்லும்படி 10-6-38 பகல் 11 மணிக்குக் கோர்ட்டில் ஆஜராகும்படியும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. சுற்றுப்பிரயாணம் செய்யும் தலைவர்களுக்குச் செய்தி திருவாரூருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.